1990 ஏப்ரல் 17]

திரு. குமரி அனந்தன் : 12 பேர் கேட்ட பிறகும் நீங்கள் விதிப்படி காரியம் செய்வதாக இருந்தாலும் அந்த விதிப்படி தானே நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதுபற்றி அலுவலகத்தில் ஆய்ந்து, மீண்டும் உங்களுக்குத் தெரிவிப்பேன்.

(3) உரிமை மீறல் பிரச்சினை

''தினகரன்'' நாளிதழ் மீது 3—4—1990ஆம் நாளைய அவை நடவடிக்கைகளை திரித்து பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் 'தினகரன்' 4—4—1990 செய்தித் தாளில் ஒரு பெட்டிச் செய்தியில் தன்னைப் பற்றித் தவறான செய்தி வெளியிடப்பட்டு உள்ளதாகவும், அது அவையின் உரிமையை மீறிய பிரச்சினையாகும் என்றும் குறிப்பிட்டு ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு அவையின் உரிமையை மீறியதாகும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது இந்த அவையில் நான் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், தலைமை வகித்துக் கொண்டிருந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது சாதாரணமாக என்னால் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு மறுநாள், 'தினகரன்' நாளிதழில் அதற்கு ஒரு முக்கியத்துவம், கொடுத்து ஒருபெட்டிச் செய்தியாக நானும் துணைத் தலைவரும் சொன்ன கருத்துக்களை மாற்றியும், திரித்தும், உள் நோக்கத்தோடும், தவறான பொருள் படும்படியும் தவறான எண்ணம் என்மீதும் இந்த அவையின் மீதும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மீதும் ஏற்படும்படியான வகையில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

10-30 மணி.

அதிலே எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருவது என்னவென்றால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பொறுமை இழந்துபோய் அதைச் சொன்னதாக அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து வேறு. செய்திகள் வேறு. சொற்கள் வேறு. ஆனால், அவர் சொல்லாத சொற்களையும் இணைத்து, திரித்து அதை வெளியிட்டதிலே உள்நோக்கம் இருக்கிறது. உரிமைமீறல்

இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக் களைத் திரித்து வெளியிட்டதன்மூலம், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய உரிமையும், இந்த அவையினுடைய உரிமையும் இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய உரிமையும் மீறப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து இதற்கான தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என்று தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நாளிதழின் ஆசிரியருக்கு எழுதி விளக்கம் கேட்டுப் பின்னர் என்னுடைய தீர்ப்பை நான் அளிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) ஜீவன்தாரா திட்டம் மூலம் நடைபெற வேண்டிய கிணறுகள் வெட்டும் பணிகள் நிலுவையில் உள்ளது குறித்து

திரு. வெ. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் ஜீவன் தாரா திட்டம் மூலம் ஆதி திராவிடர்களுக்குக் கிணறு வெட்ட கொடுத்த மானியத் தொகை ஒரு சில தவணையோடு நிறுத்தப்பட்ட காரணத்தால் திட்டம் பூர்த்தியடையாமல் இருப்பதால் ஆதி திராவிட மக்களிடம் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழகத்தில் ஜீவன்தாரா திட்டம் மூலம் ஆதி திராவிடர் களுக்குக் கிணறு வெட்ட வழங்கப்பட்ட மான்யத் தொகை நிறுத்தப்பட உத்தரவிடப்படவில்லை. நிலுவையில் உள்ள கிணறுகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றித்தர சம்பந்தப் பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் தொண்டு நிறுவனங் களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், வழங்கப்பட்டுள்ள இந்த மானியத் தொகை நிறுத்தப்பட உத்திரவிடவில்லை என்று